# சங்க இலக்கியத்தில் கவின்கலைகள்

***மு.கி.அகல்யா***
முழு நேர முனைவர் பட்ட ஆய்வாளா
தமிழ்த்துறை, ராணி அண்ணா அரசு மகளிர் கல்லூரி
திருநெல்வேலி

***முனைவா இரா. உமாதேவி***
தமிழ்த்துறை, உதவிப் பேராசிரியர்
தமிழ் உயராய்வு மையம்
ராணி அண்ணா அரசு மகளிர் கல்லூரி, திருநெல்வேலி

**மலர்: 11**

**சிறப்பிதழ்: 1**

**மாதம்: ஏப்ரல்**

**வருடம்: 2024**

**P-ISSN: 2321-788X**

**E-ISSN: 2582-0397**

**DOI:**
https://doi.org/10.34293/sijash.v11iS1-April.7740

## முன்னுரை

தமிழகம் மிகப் பழங்காலத்திலிருந்து நாகரிகத்திலும், பண்பாட்டிலும் சிறந்து விளங்கியது. இதனை அறிய உதவியாக இருப்பவை அக்காலத்தில் விளங்கிய கலைகள் ஆகும். கலைகள் காட்சிப் புலனுக்கும், செவிப்புலனுக்கும் சுவையளிக்கும் வகையில் வளர்ந்துள்ளன. ஆயகலைகள் அறுபத்து நான்கு என்பது பழந்தமிழர் தொடராகும். இவ் அறுபத்து நான்கு கலைகளில் முதன்மைப் பெற்று விளங்குபவை ஏழாகும். இவ் ஏழினையும் “கவின்கலைகள்” என்ற சிறப்புத் தொடரால் அழைப்பது தமிழர் மரபாகும். இக்கவின்கலைகளுள் ஒன்றான “கட்டடக்கலை” பற்றிய செய்திகளை இக்கட்டுரையின் வழி அறியலாம்.

## கவின்கலைகள்

இலக்கியம் பல்வேறு துறைகளுடன் தொடர்பு கொண்டுள்ளதைப் போல கவின்கலைகளோடும் நெருங்கிய தொடர்புக்கொண்டுள்ளது. சங்க இலக்கியங்களில் பல்வேறு கலைப் பதிவுகள் இருப்பினும், உணர்வோடு கூடிய கற்பனைப்போக்கு என்ற வரையறைக்குள் வரும். கட்டடக் கலை, சிற்பக்கலை, ஓவியக்கலை, இசைக்கலை, நடனக்கலை, நாடகக்கலை, காவியக்கலை என்ற ஏழும் கவின்கலைகள் எனப் பிற்காலத்தில் சிறப்பிக்கப்பட்டுள்ளன.

## கட்டடக்கலை

சங்க இலக்கியத்தில் இடம் பெற்றுள்ள கவின்கலைகளுள் ஒன்றான கட்டடக்கலை, ஓரினத்தின் நாகரிக செழுமையினை எடுத்துக் காட்டும் சின்னங்களில் குறிக்கத்தக்கது. கட்டடங்களின் அமைப்பும், வேலைப்பாடும் மக்களின் அறிவுக்கும், முயற்சிக்கும் அடையாளமாகத் திகழ்கின்றது.

தமிழரின் கட்டடக்கலை தமிழரின் மரபுக்கே உரியது. தொல்பழங்காலம் முதற்கொண்டே தமிழர் கட்டடக்கலையைப் பேணி வளர்த்து வந்துள்ளனர்.

## கட்டடக்கலைத் திறன்கள்

சங்க இலக்கியத்தில் இடம் பெற்றுள்ள கட்டடக்கலை நுட்பங்களான கற்கட்டடம், மரக்கட்டடம், இரும்புக் கட்டடம், சிமெண்ட் கலவைக் கட்டடம் என வகைப்படுத்தப்பட்டுள்ளன. சங்க காலத்தில் கட்டப்பெற்ற கட்டடங்கள், கோயில்கள் யாவும் செங்கல்லாலும், மரத்தாலும் அமைக்கப் பெற்றவையே. இத்தகைய கட்டடங்கள் சுண்ணம் புசப்பெற்று அழகுறத் திகழ்ந்தன என்பதை,

**"சுகுறியவு நெடியவுங் குன்று கண்டன்ன**
**சுடு மண்ணோங்கிய நெடுநிலைக் கோட்டம்"**

**- மணிமேகலை**

என்று மணிமேகலை கூறுகிறது.

## கோட்டை

மன்னர்கள் அரசாளும் நாட்டின் தலைநகரங்கள் பலவும் கோட்டைகளால் சூழப்பட்டிருந்தன. இக்கோட்டைகள் இஞ்சி எனவும் அழைக்கப்பட்டன. என்பதை,

**'சுவேந்துகுறை யுறவுங் கொடாஅன், ஏந்து கோட்டு**
**எழுவிட்டு அமைத்த திண்ணிலைக் கதவின்**
**அரைமண் இஞ்சி நாட்டுகொடி நுடங்கும்"**

**- புறநானூறு**

என்று புறநானூறு கூறுவதிலிருந்து கோட்டை ஏழுமரத் தாழ்ப்பாள் கொண்டது. மண்ணை அரைத்துக் கட்டப்பட்டது என்பதை அறிய முடிகிறது. மேலும், பதிற்றுப்பத்திலும்,

**"சுகோடு உறழ்ந்து எடுத்த கொடுங்கண் இஞ்சி"**

**- பதிற்றுப்பத்து16**

**"சுமண்புனை இஞ்சி மதில் கடந்து"**

**- பதிற்றுப்பத்து 58**

மண்ணால் கட்டப்பட்ட கோட்டை மதில்கள் இருந்ததை அறிய இயல்கிறது. இக்கோட்டைகள் வலிமையுடையனவாக மலை போல் இருந்தன என்பதை,

**"புனல் பொரு கிடங்கின், வரைபோல் இஞ்சி"**

**- பதிற்றுப்பத்து 62**

என்று பதிற்றுப்பத்து கூறுகிறது.

**"சுவான் தோய இஞ்சி நல்நகர் புலம்ப""**

**- அகநானூறு 35**

வானளாவிய உயர்ந்த மதில் சுவர் கொண்ட மாளிகை என அகநானூறு கூறுகிறது.

நெடிதுயர்ந்து எழுப்பப்பட்ட கோட்டை மதில்களில் பகைவரின் படைகளை எதிர்க்க படைவீரர் உள்ளிருந்து தாக்கும் வண்ணம் என்ற அகநானூற்று பாடலடியின் மூலம் அறியலாம். மேலும் செம்பை உருக்கிக் கருங்கற்களை இணைத்துக் கோட்டை மதில்கள் எழுப்பப் பெற்றதை,

**"சுசெம்பு இமயன்றன்ன செய்வுறு நெடுஞ்சுவா"**

**- நெடுநல்வாடை 107**

என்ற பாடல்வரிகளின் மூலம் மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரர் கூறுகிறார். இதுமட்டுமின்றி கோட்டையின் வாயிலானது போரில் வெற்றி பெற்று வரும் வீரன், யானை மீதமர்ந்து உயர்த்திய கொடியுடன் நுழையும் வண்ணம் மலையில் குடைந்தது போல் உயர்ந்து இருந்தது என்பதை ,

**"சுஜயவி அப்பிய நெய்யணி நெடுநிலை**
**வென்று எழு கொடியொடு வேழம் சென்றுபுக,**
**குன்று குயின்றன்ன ஓங்கு நிலை வாயில்""**

**- நெடுநல்வாடை 86-88**

என்று நெடுநல்வாடை கூறுகிறது. இவ்வாறு கோட்டை வானளவு உயர்ந்தும் வலிமை மிகுந்தும் காணப்பட்டன.

கோட்டை வாயிற்கதவுகள் மரத்தால் அமைக்கப்பட்டன. வாயிற் கதவங்களில் வெற்றிக் கடவுள் கொற்றவையின் உருவம் பொறிக்கப்பெற்றது. புகார்நகர வாயிற் கதவங்களில் புலியின் உருவம் பொறிக்கப்பட்டிருந்தது. இக்கதவங்களில் இரும்புப் பட்டைகள் இணைக்கப்பெற்று புட்டுவதற்கு ஏதுவாகத் தாழ்ப்பாள்கள் அமைக்கப்பெற்றது என்பதை,

**"நேர்வாய்க் கட்டளை திரியாது திண்ணிலைப்**
**போர்வாய் கதவம் தாழொடு துறப்பக்"**
***- நெடுநல்வாடை 62-63***

என்று நெடுநல்வாடையில் நக்கீரர் கூறுகிறார்.

## நகரமைப்பு

சங்ககால நகரங்கள் திட்டமிட்டுக் கட்டப்பட்டவையாக விளங்குகின்றன. இந்நகரங்கள் தாமரை மலர் போன்று வட்ட வடிவமாக அமைக்கப்பெற்றன. மலரின் மொக்குப்போல அரசனின் அரண்மைனயும், அரசியலதிகாரிகளின் வளமனைகளும், அறங்கூறவையமும் நகரின் நடுவில் அமைக்கப்பட்டன.

நகரங்களிலும் ஊர்களிலும் வீதிகள் அகன்றும் நீண்டும் இருந்தமையை,

**"சுயாறுகிடந்தன்ன அகல்நெடும் தெரு"**
***- நெடுநல்வாடை 30***

என்று நெடுநல்வாடையும், நீரோடும் ஆறுபோல் மக்கள் நடமாடும் தெருக்கள் அமைந்திருக்கும் என்பதை,

**"யாறு என கிடந்த தெருவின் சாறு என"**
***- மலைபடுகடாம் 481***

என்று மலைபடுகடாம் நூலின் மூலம் அறியலாம்.

## காலநிலைக் கேற்ப கட்டமைப்பு

மின்சாரம் கண்டறியப்படாத காலக்கட்டத் தில் பழந்தமிழர் வாழ்க்கை இயற்கையோடு இணைந்தே இருந்தது. அவர்தம் வீடுகள் காலநிலைக்கு ஏற்ற வகையில் கட்டப்பட்டிருந்தன என்பதை,

**"சுவானுற நிவந்த மேல்நிலை மருங்கின்**
**வேனிற பள்ளி தென்வளி தருஉம்**
**நேர்வாய்க் கட்டளை திரியாது திண்ணிலை**
**பேர்வாய்க் கதவம் தாழொடு துறப்ப"**
*- நெடுநல்வாடை 60-63*

என்ற நெடுநல்வாடை பாடல் மூலம் அறிய முடிகிறது.

## மாடங்கள்

மாளிகைகள் உயர்ந்தோங்கிய மாடங்களாக விளங்கின. அவை நிரை நிலை மாடம், மலைபுரை மாடம், நெடுநிலை மாடம், மங்குல் தோய் மாடம், வேயா மாடம், முகில் தோய் மாடம் என்று சிறப்பாகக் கூறப்பெற்றன. இதனை,

**"நிரை நிலை மாடத் தாமியந் தோறு"**
***- மதுரைக் காஞ்சி 451***

என்றும்,

**"மலைபுரை மாடத்துக் கொழு நிழலிருந்தா"**
***- மதுரைக் காஞ்சி 406***

என்ற பாடலடிகளின் மூலம் அறிய முடிகின்றது.

உயா குடிமக்கள் வாழும் தெருக்களிலெல்லாம் இத்தகைய மாடங்கள் நிறைந்த மாளிகைகள் அமைந்திருந்ததை நாம் அறிய முடிகின்றது.

மாடங்களின் தளம் பரந்து விரிந்தும், மேலே செல்லச்செல்ல முனைப்பரப்பு குறுகிச் சென்றும் முடிவுற்றதாகத் தெரிகின்றது. இம்மாடங்களின் மேல்முனை கண்ணால் காணவியலா அளவிற்கு உயரமாக இருந்தது. மிகவுயரத்தில் பறக்கும் பருந்து முதலான பறவைகள் ஓய்வுக் கொள்ளும் அளவுக்கு அவை உயர்ந்திருந்தன என்பதை,

**"குறும்பல் குழுவிற் குன்றுகண் டன்ன**
**பருந்திருந் துகக்கும் பன்மா ணல்லிற்"**
***- மதுரைக் காஞ்சி 501***

என்று மதுரைக் காஞ்சியில் மாங்குடி மருதனார் கூறியுள்ளதன் மூலம் அறிய முடிகிறது.

## கட்டடத்திற்கு வண்ணமிடுதல்

கட்டடங்களைச் சுண்ணச் சாந்து கொண்டு கட்டினர். சுண்ணாம்பு கலந்து சுவருக்கு வெள்ளையடிப்பதும், காவி கலந்து செம்பு போன்ற வண்ணம் புசிப் புனைவதும் அக்காலத்தில் வழக்கமாக இருந்தது. சுண்ணாம்பு புசி வெள்ளைய டிக்கப் பெற்ற சுவர்களில் ஓவியங்கள் வரைந்து அழகுபடுத்தினர் என்பதை,

***"வெள்ளி அன்ன விளங்கும் சுதை உரீஇ
மணி கண்டன்ன மாத்திரள் திண்காழ்
செம்பு இயன்றன்ன செய்வுறு நெடுஞ்சுவர்
உருவப் பல்பு ஒருகொடி வளைஇ
கருவொடு பெயரிய காண்புஇன் நல்இல்..."***

***- நெடுநல்வாடை 110-114***

என்று நெடுநல்வாடை கூறுகிறது.

### கலைஞர்கள்

கட்டடக்கலை வல்ல தொழிலாளர்கள் பலரும் மிகப்பெரும் நுட்பத்தோடு செயலாற்றிய சிறப்புடையவர்களாக இருந்தனர். ஆகவே தான் இவர்கள் வல்லுநர்களாகச் சுட்டப்படும் பான்மையைச் சங்க இலக்கியத்தில் காண முடிகிறது.

ஒவ்வொரு நாளும் எட்டுத் தேர்களை முழுமையாகச் செய்யும் ஆற்றல் மிக்க தச்சன் என்பதை,

***"........................ வைகல்
எண் தேர் செய்யும் தச்சன்"***

***- புறநானூறு 87***

என்ற புறநானூற்று பாடல் வரிகளின் வழி ஔவையார் கூறுகிறார். அரண்மனையைக் கட்டிய தொழிலாளி "கைவல் கம்மியன்" என்று நக்கீரர் குறிப்பிடுகிறார் என்பதை,

***"சுகைவல் கம்மியன் முடுக்கலின்""***

***- நெடுநல்வாடை 85***

***"கருந்தொழில் வினைஞர் கைவினை முற்றி"***

***- சிறுபாணாற்றுப்படை 256***

என்ற பாடல் வரியின் வழி அறிய முடிகிறது.

இவ்வாறு கலைஞர்களைப் பற்றி சங்க இலக்கியங்கள் மூலம் அறிய முடிகின்றது.

### முடிவுரை

கட்டிடக்கலை என்பது இன்றைய தொழில்நுட்ப இயலில் பொறியியலின் பிரிவுக்குள் அடக்கிச் சுட்டப்படும் ஒரு துறையாகும். கட்டுமானத் தொழில்நுட்பம் அமையப் பழந்தமிழர் வாழிடங்கள், வீடு, அரண்மனை, நகரம், கோட்டை போன்றவற்றை அமைத்தனர் என்பதை தெளிவுப்பட அறியமுடிகின்றது. மேலும் சங்ககாலத்தில் கவின்கலைகளுள் ஒன்றான கட்டடக்கலை சிறந்து விளங்கியதையும், கட்டடக்கலையின் நுட்பம் மற்றும் கலைதயத்தையும் இன்று நாம் பேணி பாதுகாப்பது நம் ஒவ்வொருவரின் கடமையாகும்.

வாழ்க தமிழ்! வளர்க தமிழ்!